செ.வெ.எண். 23/மார்ச் தேதி : 09.03.2017

# தருமபுரி மாவட்டத்தில் ரூ. 110.00 இலட்சம் மதிப்பீட்டிலான குடிநீர் பணிகள் நடைபெற உள்ளது - மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!




தருமபுரி மாவட்டத்தில் நிலவும் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சனைக்கு உடனுக்குடன் தீர்வுகாணும் வகையில் 24 மணி நேரம் செயல்படும் 1077 கட்டுப்பாட்டு அறையில் பெறப்படும் புகார்களின் அடிப்படையில் களஆய்வு மேற்கொண்டு தேவை அடிப்படையில் புதிய குடிநீர் திட்ட பணிகள் குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தருமபுரி ஊராட்சி ஒன்றியத்தில், கே. நடுஅள்ளி கிராம ஊராட்சியை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு ரூ. 2,47,000/- மதிப்பீட்டில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் பைப்லைன் அமைத்தல் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிட்டார்.

தருமபுரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 28 கிராம ஊராட்சிகளிலும் முழுவதுமாக குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஆழ்துளை கிணறுகள் அமைத்தல் மற்றும் பைப்லைன் அமைத்தல் மற்றும் நீட்டித்தல் குடிநீர் பற்றாக்குறையை சரிசெய்ய, பணிகள் தேர்வு செய்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் மூக்கனூர் ஊராட்சியில் 2 பணிகளுக்கு ரூ. 4,40,000/-மும், உங்குரானஅள்ளி ஊராட்சியில் 3 பணிகளுக்கு ரூ. 8,44,000/-மும், நூலஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 3,16,000/-மும், குப்பூர் முக்கல்நாய்க்கன்பட்டி ஊராட்சியில் 4 பணிகளுக்கு ரூ. 5,42,000/-மும், அ.கொல்லஅள்ளி ஊராட்சியில் 2 பணிகளுக்கு ரூ. 5,36,000/-மும், அக்கமனஅள்ளி ஊராட்சியில் 2 பணிகளுக்கு ரூ. 4,17,000/-மும், ஆண்டிஅள்ளி ஊராட்சியில் 2 பணிகளுக்கு ரூ. 4,40,000/-மும், கோடுஅள்ளி ஊராட்சியில் 3 பணிகளுக்கு ரூ. 6,36,000/-மும், கோணங்கிநாய்க்கனஅள்ளி ஊராட்சியில் 2 பணிகளுக்கு ரூ. 2,00,000/-மும், செம்மாண்டகுப்பம் ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 80,000/-மும் செட்டிக்கரை ஊராட்சியில் 1 பணிக்கு ரூ. 2,65,000/-மும், வெள்ளோலை ஊராட்சியில் இரண்டு பணிகளுக்கு ரூ. 5,31,000/-மும், வெள்ளாளப்பட்டி ஊராட்சியில் 3 பணிகளுக்கு ரூ. 6,00,000/-மும், திப்பிரெட்டிஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ.5,00,000/-மும், இலக்கியம்பட்டி ஊராட்சியில் 4 பணிகளுக்கு ரூ. 16,70,000/-, நல்லசேனஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2,37,000/-மும், கடகத்தூர் ஊராட்சியில் 2 பணிகளுக்கு ரூ. 1,68,000/-மும், அதகப்பாடி ஊராட்சியில் 2 பணிகளுக்கு ரூ. 1,55,000/-மும், வி.முத்தம்பட்டி ஊராட்சியில் 2 பணிகளுக்கு ரூ. 2,50,000/-மும், கொண்டகரஅள்ளி ஊராட்சியில் 3 பணிகளுக்கு ரூ. 8,58,000/-மும், அளேதருமபுரி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 3,00,000/-மும், கொண்டம்பட்டி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ.

7,40,000/-மும் என மொத்தம் 46 பணிகளுக்கு ரூ. 110.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாகம் அனுமதி வழங்கப்பட்டு பணிகள் பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

மேலும் மக்களின் தேவைகேற்ப குடிநீர் பற்றாக்குறையை தீர்க்கும் பொருட்டு மாவட்ட கண்காணிப்பு மைய எண்.1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ் அப் எண். 8903891077 என்ற எண்கள் மூலம் பெறப்படும் புகார்கள் மற்றும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு ஊரக உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியிலிருந்து குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய கூடுதல் திட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.